www.Padasalai.Net www.TrbTnpsc.com

V12T

விருதுநகர் மாவட்டம்
அரையாண்டுப் பொதுத்தேர்வு - 2023

வகுப்பு 12

கால அளவு: 3.00 மணிநேரம்

பொதுத் தமிழ்

மதிப்பெண்கள்: 90

பகுதி - I

அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 14×1=14

1) இலக்கியத்தையும் மொழியையும் ஒரு சேரப் பேசுகின்ற இலக்கண நூல்?
அ) யாப்பருங்கலக் காரிகை ஆ) தண்டியலங்காரம்
இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்

2) தமிழில் திணைப் பாகுபாடு ........... அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.
அ) பொருட்குறிப்பு ஆ) சொற்குறிப்பு
இ) தொடர்புகுறிப்பு ஈ) எழுத்துக்குறிப்பு

3) வெள்ளச் சமவெளிகள் அழியக் காரணம்
அ) பருவநிலை மாற்றம் ஆ) மணல் அள்ளுதல்
இ) பாறைகள் இல்லாமை ஈ) நிலத்தடி நீர் உறிஞ்சப்படுதல்

4) கைப்பொருள் அற்றான் கற்பதெவ்வகை? என்ற கவிதை வரியின் ஆசிரியர்?
அ) சுரதா ஆ) பாரதிதாசன் இ) பாரதி ஈ) மேத்தா

5) 'உவா உறவந்து கூடும் உடுபதி, இரவி ஒத்தார்' - யார் யார்?
அ) சடாயு, இராமன் ஆ) இராமன்,குகன்
இ) இராமன், சவரி ஈ) இராமன்,சுக்ரீவன்

6) சுரதா நடத்திய கவிதை இதழ்
அ) இலக்கியம் ஆ) காவியம் இ) ஊர்வலம் ஈ) விண்மீன்

7) யானை தன் வாய்நிறை கொண்ட வலிதேம்பு தடக்கை குன்றுபுகு பாம்பின்தோன்றும் - இதில் எவ்வகைப் படிமம் வெளிப்படுகிறது?
அ) மெய்ப்படிமம் ஆ) வினைப்படிமம் இ) உருப்படிமம் ஈ) பயன்படிமம்

8) 'உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்' - இத்தொடர் உணர்த்தும் பண்பு
அ) நேர்மறைப்பண்பு ஆ) எதிர்மறைப்பண்பு
இ) முரண் பண்பு ஈ) இவை அனைத்தும்

9) 'பலர் துஞ்சவும்தான் துஞ்சான்' - விழித்தவரும் அவரைப் பாடியவரும்
அ) சோழன் நலங்கிள்ளியை, கோவூர்கிழார்
ஆ) கரிகாலனை, உருத்திரங்கண்ணனார்
இ) சோழன் நெடுங்கிள்ளியை, பாணர்
ஈ) கணைக்கால் இரும்பொறையை, கபிலர்

10) உன்மனம் ஒரு பாற்கடல் அதைக் கடைந்தால் அமுதம் மட்டுமல்ல ஆலகாலமும் வெளிப்படும் என்பதை நீ அறிவாய் அல்லவா - என்றுதொன்மத்தைக் கொண்டு முரண்பாட்டை விளக்கியவர்
அ) அப்துல் ரகுமான் ஆ) உத்தம சோழன்
இ) சாந்தா தத் ஈ) தோப்பில் முகமது மீரான்

11) **பொருத்துக.**

| | | |
|---|---|---|
| அ) மாச்சீர் | - | 1) கருவிளம், கூவிளம் |
| ஆ) காய்ச்சீர் | - | 2) நாள், மலர் |
| இ) விளச்சீர் | - | 3) தேமாங்காய், புளிமாங்காய் |
| ஈ) ஓரசைச்சீர் | - | 4) தேமா, புளிமா |

அ) 3 4 2 1 ஆ) 2 3 1 4 இ) 4 3 1 2 ஈ) 1 2 4 3

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

V12T

12) பூமணி படைப்புகளில் மாறுபட்டவை

அ) அறப்பு

ஆ) கருவேலம்பூக்கள்

இ) வயிறுகள்

ஈ) நொறுங்கல்கள்

13) 'திட்டம்' என்னும் தலைப்பில்' வரங்கள் சாபங்கள் ஆகுமென்றால் இங்கே தவங்கள் எதற்காக?

அ) அமுத சுரபி

ஆ) அதிரைப் பருக்கை

இ) திட்டம்

ஈ) பயனற்ற விளைவு

14) ச.த.சற்குணரின் உரையைக் கேட்டுத் தூண்டப்பெற்ற மயிலை சீனி வேங்கடசாமி எழுதிய நூல்

அ) பௌத்தமும் தமிழும்

ஆ) இசுலாமும் தமிழும்

இ) சமணமும் தமிழும்

ஈ) கிறித்தவமும் தமிழும்

## பகுதி - II

### பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** **3×2=6**

15) 'நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது' விளக்கம் தருக.

16) கலி விழா, ஒலி விழா - விளக்கம் தருக.

17) பகைவராலும் அழிக்க முடியாத அரண் எது?

18) இறைமகனாரின் இன்னலைக் கண்டு மக்கள் எவ்விதம் புலம்பினர்?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2×2=4**

19) நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.

20) அக்காலத்து கல்வி முறையில் மனனப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் எவை?

21) கீழ்த்திசை சுவடி நூலகம் குறித்து எழுதுக.

### பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** **7×2=14**

22) **பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்க.**

களம் - கலம்

23) **உவமைத் தொடர்களைச் சொற்றொடரில் அமைத்திடுக.**

அ) கிணற்றுத்தவளை போல

ஆ) நகமும் சதையும் போல

24) **மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.**

அலை, அளை, அழை

25) **தொடரில் உள்ள மரபுப்பிழைகளை நீக்கி எழுதுக.**

வாழைக்காட்டில் குயில்கள் அலறிக் கொண்டும் காகங்கள் கூவிக் கொண்டும் இருந்தன.

26) **ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

அ) வளர்ந்த

ஆ) கண்டான்

27) **ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக**

அ) இனநிரை

ஆ) வெங்கதிர்

www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com



28) **பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக**

அ) இப்ப எனக்கு புரிஞ்சு போச்சு. நீயும் புரிஞ்சிக் கோ

ஆ) ரவைக்கு சித்தப்பன காவலுக்குப் போவச் சொல்

29) **சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க**

அ) தாமரை

ஆ) பலகை

30) ஒரு விகற்பம், பல விற்பம் என்றால் என்ன?

## பகுதி - III

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2×4=8**

31) வாடைக் காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?

32) இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார்?

33) எவற்றையெல்லாம் விட நன்றி உயர்ந்தது? - குறள்வழி விளக்குக.

34) யானை புக்க புலம்போல தானும் உண்ணான் உலகமும் கெடுமே - உவமையையும் பொருளையும் பொருத்தி எழுதுக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2×4=8**

35) சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிட்டத்தக்க ஒரு பண்பாகும்- விளக்குக.

36) நீங்கள் ஆசிரியரானால் மாணாக்கரை அன்பினால் எவ்வகையில் நெறிப்படுத்துவீர்கள்?

37) சென்னை நகரின் போக்குவரத்து வளர்ச்சி குறித்து எழுதுக.

38) கொடை வழங்குதலில் நீங்கள் பின்பற்ற விரும்புவனவற்றை எழுதுக.

### பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** **3×4=12**

39) நிரல்நிறை அணியைச் சான்றுடன் விளக்குக.

**(அல்லது)**

உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள் பாம்போடு உடன் உறைந் தற்று- இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

40) **பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.**

அ) யானைக்கும் அடி சறுக்கும்

**(அல்லது)**

ஆ) சுடர் விளக்காயினும் தூண்டுகோல் வேண்டும்

41) அ) பாடாண் திணையைச் சான்றுடன் விளக்குக.

**(அல்லது)**

ஆ) செவியறிவுறூஉத் துறையைச் சான்றுடன் விளக்குக.

42) **இலக்கிய நயம் பாராட்டுக.**

(மையக் கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக.)

வெட்டி யடிக்குது மின்னல் - கடல்
வீரத்திரை கொண்டு விண்ணையிடிக்குது;
கொட்டி யிடிக்குது மேகம் - கூ

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



கூ வென்று
விண்ணைக் குடையுது
காற்று சட்டச்சட
சட்டச்சட
டட்டா - என்று
தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம் எட்டுத்திசையும்
இடிய - மழை எங்ஙனம்
வந்ததடா தம்பி வீரா!

- பாரதியார்

43) **தமிழாக்கம் தருக.**

1. Learning is a treasure that will follow it's owner everywhere.
2. A new language is a new life
3. Knowledge of language is the doorway to wisdom
4. The limits of my language are the limits of my world.

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** **3×6=18**

44) அ) பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன், பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையைப் பாடப் பகுதி வழி நிறுவுக

**(அல்லது)**

ஆ) திருக்குறள் ஒரு வாழ்வியல் இலக்கியம் - நிறுவுக.

45) அ) பண்டைக்காலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கு இடையே நிகழ்ந்த கற்றல் கற்பித்தல் முறைகளைத் தொகுத்து எழுதுக.

**(அல்லது)**

ஆ) நிருவாக மேலாண்மை குறித்து வெ.இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

46) அ) 'கிராமங்கள் தங்கள் முகவரியை இழந்து வருகின்றன.'-இது குறித்து உங்கள் கருத்தை விவரிக்க

**(அல்லது)**

ஆ) கோடைமழை கதை வாயிலாக விளக்கப்படும் மனித நேயப்பண்புகளை விளக்குக.

## பகுதி - V

47) **அடி பிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக.** **4+2=6**

அ) 'பாதகர் குழுமி .........' எனத் தொடங்கும் இரட்சணி யாத்திரிகப் பாடல்

ஆ) 'சுடும்' என முடியும் குறளை எழுதுக.

\- - - - - - -

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com